Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 24.03.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 24.03.2026 – செவ்வாய்க்கிழமை** **நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

மேற்காசியாவில் நிலவும் மோதல் நிலவரம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாநிலங்களவையில் விளக்கமளித்தார்.

காசநோய் உலகெங்கிலும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் ஒரு பொது சுகாதார சவால் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இந்து, சீக்கிய அல்லது பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பட்டியல் சாதி அந்தஸ்து கோர தகுதியுடையவர்கள் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

புதுச்சேரி, கேரளா, அஸ்ஸாம் மாநிலங்களில் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களின் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

*மோடி - உரை 1 (17)*

மேற்காசியாவில் நிலவும் மோதல் நிலவரம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாநிலங்களவையில் விளக்கமளித்தார். அப்போது பேசிய அவர், பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் மேற்காசிய பகுதிகளில் அமைதியை மீட்டெடுப்பது குறித்து கூறினார். அப்பகுதிகளில் பதற்றத்தை தணிப்பதுடன் ஹார்மூஸ் ஜலசந்தியை மீண்டும் திறப்பது குறித்த பிரச்சனைகளை இந்தியா எழுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். மேற்காசியாவில் நடந்து வரும் போர் 3 வாரங்களுக்கும் மேலாக நீடிப்பதால் உலகம் முழுவதும் கடுமையான எரிசக்தி நெருக்கடி உருவாகியுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த மோதலால் வர்த்தகப் பாதைகள் பாதிக்கப்படுவதால் இது இந்தியாவிற்கும் கவலையளிப்பதாக உள்ளது

என்றார். பெட்ரோல், டீசல், எரிவாயு மற்றும் உரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் வழக்கமான விநியோகத்தை இந்தச் சூழ்நிலை சீர்குலைப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். வளைகுடா நாடுகளில் கிட்டத்தட்ட ஒரு கோடி இந்தியர்கள் வசித்து வருவதாக தெரிவித்த பிரதமர், அவர்களின் உயிருக்கும், வாழ்வாதாரத்திற்கும் பாதுகாப்பு அளிப்பது இந்தியாவின் முக்கிய நடவடிக்கையாக உள்ளது என்றார்.

*மோடி - உரை 1 (07)*

இதற்கிடையே தற்போதைய நிலவரம் குறித்தும், அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் திரு.நரேந்திர மோடி நேற்று மக்களவையில் விளக்கினார். கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா தனது எரிசக்தி இறக்குமதியை 27 நாடுகளிலிருந்து 41 நாடுகளுக்கு விரிவுபடுத்தியுள்ளதாகவும், இதன் மூலம் எந்தவொரு குறிப்பிட்ட பிராந்தியத்தையும் சார்ந்திருக்கும் நிலை குறைக்கப்பட்டுள்ளதாகவும் அப்போது பிரதமர் தெரிவித்தார்.

*திரௌபதி முர்மு (10)*

உலக காசநோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், காசநோய் உலகெங்கிலும் மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் ஒரு பொது சுகாதார சவாலாக தொடர்ந்து இருந்து வருகிறது என்று தெரிவித்துள்ளார். காசநோய் இல்லாத பாரதம் இயக்கமானது, காசநோயை முன்கூட்டியே கண்டறிந்து இலவச சிகிச்சையை உறுதி செய்வதிலும், அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து தேவையைப் பூர்த்தி செய்வதோடு, காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் தொடர் பராமரிப்பிலும் கவனம் செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். இது குறித்த கூடுதல் தகவல்கள்.

… வாய்ஸ் …

*திரௌபதி முர்மு வாய்ஸ் (16)*

… வாய்ஸ் …

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்த ஆண்டின் கருப்பொருளான, “நம்மால் காசநோயை ஒழிக்க முடியும்” என்பது தன்னம்பிக்கை அளிக்கக்கூடியது என்றும், உள்ளூர் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வலுவான அர்ப்பணிப்பை ஊக்குவிக்க இந்த கருப்பொருள் மிகப்பெரிய வாய்ப்பை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், மருத்துவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், காசநோய்க்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தியுள்ளனர். புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில், நுரையீரல் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவத்துறையின் பேராசிரியரும், தலைவருமான டாக்டர் அனந்த மோகன் கூறுகையில், அடுத்த பத்து முதல் பதினைந்து ஆண்டுகளில் படிப்படியாக காசநோய் பாதிப்பை குறைப்பதை, தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது என்றார். மேலும், காசநோயை ஒழிப்பதற்கு விழிப்புணர்வும், சரியான நேரத்தில் அளிக்கப்படும் சிகிச்சையும் மிகவும் அவசியமானது என்று டாக்டர் அனந்த மோகன் கூறியுள்ளார்.

*மோடி – காசநோய் (11)*

காசநோய் கண்டறியும் தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னேற்றமடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இன்று காசநோய் ஒழிப்பு தினத்தையொட்டி மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா எழுதிய கட்டுரையை, தமது சமூக ஊடகப்பதிவில் பகிர்ந்து கொண்ட பிரதமர், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் இந்தியா தொடர்ச்சியான முதலீடுகளை செய்து வருவதாக தெரிவித்துள்ளார். இந்தியாவில் காசநோய் கண்டறியும் கருவிகளைக் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்டிருப்பது குறித்து பிரதமர் மேற்கோள் காட்டியுள்ளார். திரு. ஜே.பி. நட்டா தமது கட்டுரையில், ஜன பாகிடாரி திட்டத்தின் கீழ் காசநோயை ஒழிப்பதற்கான இந்தியாவின் பயணத்தை எடுத்துரைத்துள்ளார்.

*உச்ச நீதிமன்றம் (14)*

இந்து, சீக்கிய அல்லது பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பட்டியல் சாதி அந்தஸ்து கோர தகுதியுடையவர்கள் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கிறிஸ்தவ மதம் போன்ற வேறு எந்த மதத்திற்கு மாறினாலும் பட்டியல் சாதி அந்தஸ்து உடனடியாகவும், முழுமையாகவும் இழக்கப்படும் என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெளிவுபடுத்தியுள்ளது. இது தொடர்பான ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றத்தின் உத்தரவை உறுதி செய்துள்ள உச்ச நீதிமன்றம், ஒருவர் கிறிஸ்துவ மதத்திற்கு மாறி அந்த நம்பிக்கையைத் தீவிரமாக பின்பற்றி வந்தால், அவரை அதன் பிறகு பட்டியல் சாதியைச் சேர்ந்தவராக கருதப்பட முடியாது என்றும் தெரிவித்துள்ளது. கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய தலித் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு நபர் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கோர முடியாது என்றும் நீதிபதிகள் திரு. பி.கே. மிஸ்ரா மற்றும் திரு. மன்மோகன் அடங்கிய அமர்வு, தீர்ப்பளித்துள்ளது.

*தேர்தல் புதுச்சேரி (06)*

புதுச்சேரி, கேரளா, அஸ்ஸாம் மாநிலங்களில் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களின் பரிசீலனை இன்று நடைபெற்றது.வேட்பு மனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும். புதுச்சேரியிலுள்ள 30 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு 445 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இது குறித்த கூடுதல் தகவல்கள்.

…வாய்ஸ்…

*தேர்தல் புதுச்சேரி – வாய்ஸ் (14)*

… வாய்ஸ் …

புதுச்சேரியில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கு கடைசி நாளான நேற்று மட்டும் 326 பேர் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இதன் மூலம் புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனாமைச் சேர்ந்த 30 தொகுதிகளுக்கும் 442 பேர் 514 மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். தேசிய ஜனநாயக கூட்டணியில் என்.ஆர். காங்கிரஸ் 16 தொகுதிகளிலும், பிஜேபி 10 தொகுதிகளிலும், அஇஅதிமுக மற்றும் லட்சிய ஜனநாயக கட்சி தலா இரண்டு தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ் 16 தொகுதிகளிலும்,திமுக 12 தொகுதிகளிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன. இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி 3 தொகுதிகளில் மட்டும் தனித்து போட்டியிடுவதாகவும், மீதமுள்ள 27 தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு அளிக்கும் என்றும் அக்கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது,

*ராஜ்நாத் சிங் (14)*

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில், அண்மைக்கால சர்வதேச மற்றும் பிராந்திய பாதுகாப்பு நிலவரங்களுக்கான உயர்மட்ட ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது. மேற்காசிய மோதல் நான்காவது வாரத்தை எட்டியுள்ள நிலையில், குறிப்பாக, ஹார்மூஸ் ஜலசந்தி வழியாக மேற்கொள்ளப்படும் உலகளாவிய வர்த்தகம் கணிசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது. முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அணில் சௌஹான், விமானப்படை தலைவர் மார்ஷல் அமர் ப்ரீத் சிங், ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, கப்பல் படை தலைவர் அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி, பாதுகாப்புத்துறை செயலர் திரு. ராஜேஷ் குமார் சிங் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் செயலர் திரு. சமீர் காமத் மற்றும் பாதுகாப்பு தளவாடங்களின் உற்பத்தி துறையின் செயலர் திரு. சஞ்சீவ் குமார் ஆகியோரும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

*அஸ்வினி வைஷ்ணவ் -1 (16)*

இந்த ஆண்டு 52 வாரங்களில் 52 சீர்திருத்தங்களை மேற்கொள்வது குறித்த இந்திய ரயில்வேயின் திட்டத்தின் ஒரு பகுதியாக 5 சீர்திருத்தங்களை செயல்படுத்துவது குறித்து மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று அறிவித்தார். புதுடெல்லியில் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் பயணச்சீட்டுகளை ரத்து செய்தல் மற்றும் பணத்தை திரும்பப் பெறுவதற்கான விதிகள், ரயில் பயணத்தின் புறப்படும் இடத்தை மாற்றுதல், உப்பு மற்றும் வாகனப் போக்குவரத்து, கட்டுமான தரம் ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக கூறினார். பயணச் சீட்டுகளை ரத்து செய்தல் மற்றும் பணம் திரும்பப் பெறுதல் தொடர்பான சீர்திருத்தங்களை தெரிவித்த அவர், ரயில் புறப்படுவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னதாக ரத்து செய்யப்படும் பயணச்சீட்டுகளுக்கு, குறைந்தபட்ச கட்டணமும், 24 மணி நேரத்திற்கு முன்பு ரத்து செய்தால் 25 சதவிகிதமும், 8மணி நேரத்திற்கு முன்பு ரத்து செய்தால் 50 சதவிகித கட்டணமும் விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். ரயில் பயணத்திற்கான புறப்படும் இடத்தை மாற்றுவது குறித்து கூறிய அமைச்சர், ரயில் புறப்படுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு வரை அந்த இடத்தை மாற்றிக்கொள்ளலாம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

*தேர்தல் ஆணையம் (11)*

சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள 5 மாநிலங்களின் எல்லையோரங்களிலுள்ள 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலர்கள், தலைமை தேர்தல் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமார் இன்று ஆய்வுக் கூட்டம் நடத்தினார். இதில் தேர்தல் ஆணையர்கள் டாக்டர் S.S. சந்து மற்றும் டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது, சட்டம் ஒழுங்கு, சட்டவிரோத பணப்பரிவர்த்தனை, மாநிலங்களுக்கு இடையேயான சோதனைச் சாவடிகள் மற்றும் தேர்தல் செலவினங்கள் அதிகமுள்ள தொகுதிகள் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.

*வானிலை (11)*

தமிழகம்,புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், வரும் 26ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மேற்காசியாவில் நிலவும் மோதல் நிலவரம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாநிலங்களவையில் விளக்கமளித்தார்.

காசநோய் உலகெங்கிலும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் ஒரு பொது சுகாதார சவால் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இந்து, சீக்கிய அல்லது பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பட்டியல் சாதி அந்தஸ்து கோர தகுதியுடையவர்கள் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

புதுச்சேரி, கேரளா, அஸ்ஸாம் மாநிலங்களில் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களின் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது BI/CN/VM**

**Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 24.03.2026 / Script**